**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 46 of 2024

Depositions of PW -2 witness for ________ Prosecution / Defence / Court

Name : ஸ்வேதா ரேலின்

Father's Name : ஜெயராமன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of August** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கணபதி காயத்ரி அப்பார்ட்மெண்டில் குடியிருந்து கொண்டு தற்பொழுது கல்லூரி படிப்பு முடித்து வீட்டில் இருந்து வருகிறேன். எதிரி என்னுடைய தந்தை. சம்பவ விபத்தில் இருந்த அமுதஞானஅரசி எனது தாய். கடந்த 22.01.2023 ம் வருடம் திண்டுக்கல் சென்று மீண்டும் கோவை வருவதற்காக எனது அப்பா காரை ஓட்டி வந்து தாராபுரத்தில் நின்று டீ அருந்து விட்டு மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு சூலூர் அருகே வந்த பொழுது எதிர் திசையில் வந்த கார் அதிவேகமாக வளைவில் வந்து எங்கள் கார் மீது மோதி விட்டது. எங்கள் கார் மீது எதிர் திசையில் வந்த CIAZ கார் மோதியதில் கார் நடுவிலிருந்த தடுப்பை கடந்து வந்து நின்றது.

2. மேற்படி காரில் எனது அம்மா எனது தந்தையின் அருகில் காரின் முன் இருக்கையில் அமர்ந்திருந்தார். நான் எனது தந்தைக்கு பின்னால் அமர்ந்திருந்தேன். எனது பக்கத்தில் எனது

தங்கை இருந்தார். எனது அம்மாவிற்கு விபத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. எனக்கு இடது தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது தந்தைக்கு நெஞ்சு பகுதியில் பலத்த அடிபட்டது எனது தங்கைக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எங்கள் எதிர் திசையில் வந்த காரை சுமார் 40 முதல் 45 வயது மதிக்கத்தக்க நபர் ஓட்டி வந்தார். அவர் அருகில் ஒரு வயதான ஆண் அமர்ந்திருந்தார். என்னை சம்பவ இடத்திலிருந்து அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக, மேலும் விபத்தில் காயமடைந்த எனது அம்மாவை மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிசிச்சையில் இருந்த பொழுது சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

1. விபத்து நடந்த போது இரவு 12 முதல் 12.15 மணி இருக்கும்.
2. நான் தற்பொழுது முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் போலீசார் என்னை விசாரித்த பொழுதும் சொன்னேன் என்றால் சரிதான்.
3. என்னை போலீசார் விசாரித்த பொழுது எனது தந்தை தாராபுரத்தில் நிறுத்தி TEA அருந்தி REFRESH ஆயினோம் என சொல்லவில்லை என்றும், எதிரி எனது தந்தை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
4. நான் எனது தந்தையின் பின் இருக்கையில் அமர்ந்து வந்ததால் எனக்கு முன்பாக வரும் வாகனத்தை பார்த்திருக்க வாய்ப்பு இல்லை என்றும், மேற்படி எனது முன்பாக வந்த வாகனம் வந்து மோதியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
5. மேற்படி சம்பவத்தில் எனது தந்தை தூக்கத்தில் சாலையின் நடுவே ½ அடி தடுப்பை தாண்டி சென்று எதிர் திசையில் வந்த காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.
6. பொதுவாக கார் கதவின் மீது வேகமாக மோதிக்கொண்டால் கதவை எளிதாக திறக்க இயலாது என்றால் சரிதான்.
7. விபத்து ஏற்பட்ட உடன் நான் சுயநின்வின்றி இருந்தேன் என்றும் சம்பவத்தை பார்த்திருக்க வாய்ப்பு இல்லை என்றும், மேற்படி உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தின்போது எனது தந்தை மற்றும் தாய் இருவரும் SEAT BELT அணிந்திருந்தார்கள். நான் சம்பவத்தை

நேரில் பார்க்கவில்லை என்றும், மேற்படி விபத்தை எனது தந்தை தான் எதிர் திசையில் சென்று ஏற்படுத்தினார் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது உண்மை சம்பவத்தை மறைத்து மேற்படி எதிர் திசை வந்த கார் எனது தந்தை ஓட்டி சென்ற காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.08.13 17:44:13 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**